# இந்து சமய அறநிலையத்துறை

மானியக் கோரிக்கை எண்–47

## அறிவிப்புகள்
## 2015–2016

**இரா. காமராஜ்**
உணவு, இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்

# இந்து சமய அறநிலையத்துறை

# அறிவிப்புகள் 2015 –16

## 1. திருக்கோயில்கள் புனரமைப்பு, திருத்தேர்கள் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு

சென்னை, ஆர். கே. நகர், தண்டையார்பேட்டை, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் ரூ.50 இலட்சத்திலும், தேனி மாவட்டம், குச்சனூர், அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் ரூ.25 இலட்சத்திலும், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, அருள்மிகு விசாலாட்சி அம்மன் திருக்கோயிலில் ரூ.25 இலட்சத்திலும், புதூர், அருள்மிகு அய்யனார் கோயிலில் ரூ.45 இலட்சத்திலும், தருமபுரி மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம், பெத்தூர், அருள்மிகு லெட்சுமி நரசிம்மபெருமாள் கோயிலில் ரூ.25 இலட்சத்திலும், ஈரோடு மாவட்டம், திங்களூர், அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.25 இலட்சத்திலும், புதுக்கோட்டை மாவட்டம், மழையூர், அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.25 இலட்சத்திலும்,

இருந்திராப்பட்டி, அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் ரூ.25 இலட்சத்திலும், கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர், அருள்மிகு வரதராஜபெருமாள் என்கிற காட்டுப்பெருமாள் திருக்கோயிலில் ரூ.20 இலட்சத்திலும், திருவாரூர் மாவட்டம், கீழமுகுந்தனூர், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் ரூ.15 இலட்சத்திலும், பெருகவாழ்ந்தான், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.20 இலட்சத்திலும், வண்டாம்பாளையம், திருப்பள்ளி, முக்கூடல் அருள்மிகு திருநேந்திரநாதர் திருக்கோயிலில் ரூ.20 இலட்சத்திலும், கோட்டூர், அருள்மிகு மணியம்பலநாதர் திருக்கோயிலில் ரூ.20 இலட்சத்திலும், இலையூர், அருள்மிகு செல்லியம்மன் மற்றும் அய்யனார் வகையறா திருக்கோயில்களில் ரூ.20 இலட்சத்திலும், பில்லூர், மாங்குடி கட்டளை, மகாகாலநாதர் திருக்கோயிலில் ரூ.20 இலட்சத்திலும், நாமக்கல் மாவட்டம், சமயசங்கிலி, அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயிலில் ரூ.25 இலட்சத்திலும் ஆக பதினாறு திருக்கோயில்களில் ரூ.405 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து திருக்கோயில் புனரமைப்புப் பணிகளை மேற்கொளளவும், தேனி மாவட்டம், ஜம்புலிபுத்தூர், அருள்மிகு கதலி நரசிங்கப்பெருமாள்

திருக்கோயிலில் ரூ.11 இலட்சத்தில் திருத்தேர் பாதுகாப்புக் கொட்டகை அமைக்கவும், திருவாரூர் மாவட்டம், திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் ரூ.34 இலட்சத்தில் திருத்தேர் பாதுகாப்புக் கொட்டகை அமைக்கவும், கடலூர் மாவட்டம், குமாரை, அருள்மிகு பூமாலையப்பர்சுவாமி திருக்கோயிலில் ரூ.17.30 இலட்சத்தில் திருத்தேர் திருப்பணி செய்திடவும், திருமாணிக்குழி, அருள்மிகு வாமனபுரீஸ்வரர் திருக்கோயிலில் புதிய திருத்தேர் ரூ.10 இலட்சத்திலும், ஆக நான்கு திருக்கோயில்களில் ரூ. 72.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 2. திருக்கோயில்களில் காவடி, தீச்சட்டி எடுக்கும் பக்தர்களிடம் பெறப்படும் கட்டணத்தை இரத்து செய்தல்

பக்தர்கள் தங்களுக்கு வேண்டுதல் நிறைவேறவும், வேண்டுதல் நிறைவேறியபின் நன்றிக்கடனாகவும், திருக்கோயில்களுக்கு காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். இப்படிக் காவடி எடுத்துவரும் பக்தர்களிடம் தற்போது திருக்கோயில்களில் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதேபோன்று அம்மன் திருக்கோயில்களில் தீச்சட்டி/அக்னிச்சட்டி ஏந்துவோரிடம் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அனைத்து பக்தர்களும் பயன்பெறும் வகையில் காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துவதற்கு வசூலிக்கப்படும் கட்டணத்தையும், அம்மனுக்கு தீச்சட்டி/அக்னிச்சட்டி ஏந்தி நேர்த்திக்கடன் செலுத்துவதற்கு வசூலிக்கப்படும் கட்டணத்தையும் இரத்து செய்ய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 3. சைவ, வைணவ திருக்கோயில்களில் வேத ஆகம பாடசாலைகள் துவக்குதல்

திருக்கோயில் வழிபாட்டு முறைகள், திருமுறைகள் மற்றும் சிவ ஆகமம் அதற்குரிய வேதம், ஆகியவை குறித்த பயிற்சிகள் வழங்க சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் சைவ வேத ஆகம பாடசாலையும், வைணவ வேத ஆகமங்களைப் பயிற்றுவிக்க பூலோக வைகுண்டம் என்று அழைக்கப்படும் திருச்சி, ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் வைணவ வேத ஆகம பாடசாலைகளைப் புதிதாக துவக்கவும், இப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, தங்கும் வசதி மற்றும் உதவித்தொகை வழங்கவும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 4. திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்களில் திருமண மண்டபங்கள் அமைத்தல்

சேலம் மாவட்டம், எடப்பாடி, அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.70 இலட்சத்திலும், தஞ்சாவூர் மாவட்டம், கரம்பயம், அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.70 இலட்சத்திலும், திருவாரூர் மாவட்டம், வடுவூர், அருள்மிகு கோதண்டராமசாமி திருக்கோயிலில் ரூ.70 இலட்சத்திலும், மன்னார்குடி, அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயிலில் ரூ.70 இலட்சத்திலும், திருத்துறைப்பூண்டி, அருள்மிகு பவஔஷதீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.30 இலட்சத்திலும், ஆக ஐந்து திருக்கோயில்களில் ரூ.310 இலட்சம் மதிப்பீட்டில் பிற திருக்கோயில்கள் நிதியிலிருந்து புதிய திருமண மண்டபம் மற்றும் திருமண மண்டப மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 5. திருக்கோயில் திருக்குளத் திருப்பணி

நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கண்ணங்குடி, அருள்மிகு தாமோதர நாராயணப்பெருமாள் திருக்கோயிலில் ரூ.10 இலட்சத்திலும், திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண்யசுவாமி திருக்கோயிலில் ரூ.10 இலட்சத்திலும், திருவாரூர் மாவட்டம், ஸ்ரீவாஞ்சியம், அருள்மிகு வாஞ்சிநாத சுவாமி திருக்கோயிலின் பிரம்ம தீர்த்தம் ரூ.15 இலட்சத்திலும், திருப்பாம்புரம், அருள்மிகு சேஷபுரீஸ்வரர் (எ) பாம்புரநாதசுவாமி திருக்கோயிலில் ரூ.20 இலட்சத்திலும், வலங்கைமான், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.20 இலட்சத்திலும், திருக்கொள்ளிக்காடு, அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.20 இலட்சத்திலும், திருராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் ரூ.10 இலட்சத்திலும், திருத்துறைப்பூண்டி, அருள்மிகு இராமர் திருக்கோயில் இராம மடகுளம் ரூ.10 இலட்சத்திலும், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர், அருள்மிகு ஆதிகேசவப்

பெருமாள் மற்றும் பாஷ்யக்காரசுவாமி திருக்கோயிலில் ரூ.17 இலட்சத்திலும், ஆக ஒன்பது திருக்கோயில்களில் ரூ.132 இலட்சம் மதிப்பீட்டில் திருக்குளத் திருப்பணிகள் மேற்கொள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 6. புதிய அன்னதானக் கூடங்கள் கட்டுதல்

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு, அருள்மிகு வடவாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூ.63 இலட்சத்திலும், மதுரை மாவட்டம், பேரையூர், சதுரகிரி, அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயிலில் ரூ.45 இலட்சத்திலும், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, அருள்மிகு ஆனந்த விநாயகர் திருக்கோயிலில் ரூ.60 இலட்சத்திலும், வலங்கைமான் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.60 இலட்சத்திலும், ஆக நான்கு திருக்கோயில்களில் ரூ.228 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து புதிய அன்னதானக்கூடங்கள் கட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 7. காவடி மண்டபம் கட்டுதல்

நாகப்பட்டினம் மாவட்டம், எட்டுக்குடி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து அடிப்படை வசதியுடன் கூடிய காவடி மண்டபம் கட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 8. இதர கட்டுமானங்கள்

மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.34 இலட்சத்திலும், ஈரோடு மாவட்டம், அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.120 இலட்சத்திலும், சேலம் மாவட்டம், அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.97.30 இலட்சத்திலும், திருவாரூர் மாவட்டம், சற்குணேஸ்வரம், அருள்மிகு சற்குணேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூ.22 இலட்சத்திலும், வலங்கைமான், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.40 இலட்சத்திலும், கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, இடைக்காடு, அருள்மிகு பேரூர் ஸ்ரீமகாதேவர் திருக்கோயிலில் ரூ.21 இலட்சத்திலும், திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு, அருள்மிகு வடவாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.32.30 இலட்சத்திலும், ஆக ஏழு திருக்கோயில்களில்

ரூ.**366.60** இலட்சத்தில் வணிக வளாகம், உணவு விடுதி, கடைகள், கோசாலை, தகவல் மையம் மற்றும் மண்டபங்கள் ஆகியவை கட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 9. பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் ரூ.58 இலட்சத்திலும், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.7 இலட்சத்திலும், திருச்சி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.39.50 இலட்சத்திலும், விழுப்புரம் மாவட்டம், தண்டரை, அருள்மிகு தணிகாச்சல முருகப்பெருமான் திருக்கோயிலில் ரூ.4.20 இலட்சத்திலும், மதுரை மாவட்டம், பேரையூர், சதுரகிரி அருள்மிகு சுந்தர மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் ரூ.75 இலட்சத்திலும், உவரி, அருள்மிகு சுயம்புலிங்கசுவாமி திருக்கோயிலில் ரூ.212.50 இலட்சத்திலும், வேலூர் மாவட்டம், மீனூர்மலை, அருள்மிகு வெங்கடேசப்பெருமாள் திருக்கோயிலில் ரூ.10 இலட்சத்திலும், விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.10 இலட்சத்திலும், சிவகங்கை மாவட்டம், அரியாக்குறிச்சி, அருள்மிகு வெட்டுடையார்

காளியம்மன் திருக்கோயிலில் ரூ. 10 இலட்சத்திலும், ஆக ஒன்பது திருக்கோயில்களில் ரூ.426.20 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கழிவறைகள், குளியலறைகள் கட்டுதல், நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்தல், பக்தர்கள் தரிசனப்பாதை, மின்விளக்குகள், மலைக்கோயில் படிக்கட்டுகள் சீரமைத்தல் மற்றும் பொருட்கள் பாதுகாப்பு அறைகள் கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 10. திருக்கோயில்கள் நடத்தும் பள்ளி, கல்லூரி மேம்பாட்டுப் பணிகள்

திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், அருள்மிகு

பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி மற்றும் பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவற்றில் ரூ.**30.80** இலட்சத்திலும், நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர், அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப்பள்ளியில் ரூ.**8** இலட்சத்திலும், திருவாரூர் மாவட்டம், கோவிலூர், பெரிய நாயகியம்மன் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ரூ.**20** இலட்சத்திலும், ஆக மூன்று பள்ளி/கல்லூரிகளுக்கு ரூ.**58.80** இலட்சம் மதிப்பீட்டில் பள்ளி, கல்லூரி மேம்பாட்டு நிதி மற்றும் திருக்கோயில் நிதியிலிருந்து கட்டட சீரமைப்பு, புதிய ஆய்வுக்கூடம் கட்டுதல், புதிய வகுப்பறை மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவற்றைச் செய்திட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 11. திருக்கோயிலைச் சுற்றி திருமதிற்சுவர் கட்டும் பணிகள்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, அருள்மிகு ரெங்கநாதப்பெருமாள் திருக்கோயிலில்

ரூ.17.70 இலட்சத்திலும், திருப்பூர் மாவட்டம், மொண்டிப்பாளையம், அருள்மிகு வெங்கடேசப்பெருமாள் திருக்கோயிலில் ரூ.43.60 இலட்சத்திலும், ஈரோடு மாவட்டம், எளவமலை, அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயிலில் ரூ.20 இலட்சத்திலும், ஆக மூன்று திருக்கோயில்களில் ரூ.81.30 இலட்சம் மதிப்பீட்டில், புதிதாக திருமதிற்சுவர்கள் அமைக்கவும், ஏற்கனவே உள்ள திருமதிற்சுவர்களை உயர்த்தி புதுப்பிக்கவும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

ஆக 58 திருக்கோயில்களுக்கு ரூ.2140.20 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம்**

**புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

**இரா. காமராஜ்**

உணவு, இந்து சமயம் மற்றும்

அறநிலையத்துறை அமைச்சர்